**கொத்மலை பிரதேச சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொத்மலை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொத்மலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1(அ) ஆம் பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் நடைமுறையல்லாத சொத்துக்களின் மொத்தம் ரூபா 139,084,859 ஆக இருந்ததுடன் அது மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கிற்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும் அம்மீதி ரூபா 134,745,052 ஆக இருந்தமையால ரூபா 4,339,807 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | வேறுபாடு இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய கடன் பட்டோர் மீதி ரூபா 37,786,842 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 41,407,282 என ரூபா 3,620,440 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு கிடைத்த ரூபா 3,620,440 ஆன கடன் தொகை கடன்பட்டோர் நிர்மாண பெறுவனவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா | கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ல் கடன்பட்டோர் மீதி அட்டவணையில் குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளதாக | |
| (இ) | ரம்பொடை நீர்வீழ்ச்சி நிர்மாண வேலைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 3,620,440 தொகை தீர்வுசெய்யப்பட்டிருந்த போதும் அது மேலும் நிர்மாண கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் அப்பெறுமதி நிர்மாண பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 6,412,083 மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 1,398,463 ஆக இருந்தமையால் ரூபா 5,013,620 வேறுபாடு ஒன்று இருந்தது. | அட்டவணைகளை தயாரிக்கும் போது கூட்டல் தவறொன்றால் பதிவு செய்துள்ளதாக | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,575,448 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,169,328 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும** | | |
| 1. | நிலுவை வருமானம் ரூபா 3,442,775 தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு ஆதனங்களை தடை செய்யும் நடவடிக்கை எடுப்பதாக | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| II | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவது இடம்பெற வேண்டிய போதிலும் | நிலுவையை அறவிடுவதற்கு ஆதனங்களை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமான சேகரிப்பினை முறையாக நிறைப்பட வேற்ற வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2020 சனவரி 01 இல் ரூபா 1,506,055 ஆன வீதவரி நிலுவையில் ரூபா 717,988 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ரூபா 91,250 ஆன ஏக்கர் வரியில் ரூபா 22,315 தொகை அறவிடப்பட்டிருந்தது. ரூபா 577,130 ஆன நிலுவை நீர் வரியில் ரூபா 158,650 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | | |
| **(ஆ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**<br>---------------------------------------------------------- | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பெறவேண்டிய தண்டப் பணம் ரூபா 1,936,831 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 5,142,470 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமான சேகரிப்பதற்கு நடவடிககை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானங்கள்**<br>--------------------------------------------- | | |
| சபை அதிகாரப் பிரதேசத்தில் 07 இடங்களில் 07 தொலைபேசி கோபுரங்கள் காணப்படுவதுடன் வருடாந்தம் வர்த்தமானியின் பிரகாரம் முன்மொழிவொன்றை நிறைவேற்றி சபைக்கு அக்கோபுரங்கள் மூலம் வருமானத்தை உழைத்துக் கொள்ளும் வழியொன்று காணப்பட்ட போதும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக வியாபார வரி அறவிடுதற்கும் வருமானத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபை அதிகார பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வரையான காலப்பகுதியில் தனியார் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட 299 அத்துமீறிய நிர்மாணங்கள் இணங்காணப்பட்டிருந்தன. அதில் 243 தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | 04 கட்டிடங்கள் உடைத்து அகற்றப்பட்டுள்ளதாகவும் கட்டிடங்கள் சட்டரீதியாக நிர்மாணத்திற்காக மேலும் 52 விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை வழங்கியுள்ளதாகவும் மீண்டும் கையளிக்கப்பட்ட 24 கட்டிட விண்ணப் பங்களில் 12 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 12 விண்ணப்பங்களில் குறைபாடுகள் இருப்பதால் அங்கீகரிக்கப் படவில்லையெனவும் 146 விண்ணப்பங்களுக்காக வழக்குத் தொடர தயார்படுத்தப்பட்டுள்ளதாக | அத்துமீறிய நிர்மாணங்கள் உரிய வகையில் செயற்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 37,786,842 ஆக இருந்ததுடன் ஒரு வருடத்தை விஞ்சிய காலம் கடந்திருந்த நிலுவையான ரூபா 12,226,721 ஐ அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அம்மீதிகளை அடுத்த ஆண்டில் தீர்வு செய்வதாக | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 53,016,881 ஆக இருந்ததுடன் அம்மீதிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 14,737,652 ஆக இருந்தது. அக்கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது இக்கடன்கொடுத்தோர் மீதிகளையும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடன்கொடுத்தோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 75,717,510 ஆக இருந்தது. அதன் கீழ் சபை அலுவலகம் காணப்படும் 02 ஏக்கர் அளவிலான காணிக்காக மாத்திரம் வெளியீட்டு உறுதி காணப்பட்டது. ஏனைய காணி (சபைக் கட்டிடங்களுடன் காணி உட்பட) தொடர்பாக உரித்து உறுதியொன்றோ அல்லது கையளிப்பு கட்டளையொன்றோ சபையிடம் காணப்படவில்லை. | இச்சபைக்குரிய காணி உறுதி மற்றும் கையளிப்பு பெற்றுக் கொள்வதற்காக கொத்மலே பிரதேச செயலகத்திடம் தற்போது கோரியுள்ளதாக | சொத்துக்களின் உரித்தினை உறுதிப்படுத்த வேண்டும் |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நவங்கம குடிநீர் செயற்திட்டம் 2020 திசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 15 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 1,979,598 ஆன பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 யூன் 26 ஆந் திகதி ரூபா 1,067,766 ஆன தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் செயளற்திட்டத்தின் மூலம் குடிநீரை வழங்குவதற்கு தவறியிருந்தது. காணப்பட்ட பழைய கருங்கல் சுவர் உடைத்து அகற்றப்பட்டு அங்கு புதிதாக மதிலொன்று நிர்மாணக்கப்பட்டிருந்த போதும் போதியளவு நீர் நிறைப்பு இடம்பெற்றிருக்கவில்லை. இந்த மதிலை நிர்மாணிப்பதற்கான பாதத்தை அமைப்பதற்கு மண் வெட்டியதால் மேல் ஓரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தது. | ஒப்பந்த முன்மொழிவில் குறைபாடுகள் இருந்தமையால் ஒப்பந்தக்காரருக்கு பகுதிக் கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | மதிப்பீடு மற்றும் நியிவிதந்துரைகளனி பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்த வருடாந்த பாதீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 2,435,000 பெறுமதியான 18 செயற்திட்டங்களை ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 யூலை மாதம் முடிவடைவதற்கு முன்னர் இந்த அபிவருத்தி முன்மொழிவுகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கிடைக்கும் நிதிஏற்பாட்டின் மூலம் பொது மக்களுக்கு ஆகக்கூடிய சேவைகளை வழங்கும் வகையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |